**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை - 2022**

**…………………………………………………………………………………**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிலையத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணஒங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 5 சொத்துக்கள் வகுப்பின் ரூபா 28,766,620 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் பிரகாரம் அந்த நிலையான சொத்துக்களின் விளைதிறன் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட தவறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். ரூபா 28,766,620 கிரயமான நிலையான சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் பிரகாரம் வினைத்திறன் ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அடுத்துவரும் கணக்காண்டின் போது சொத்துக்களினுள் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்து மீண்டும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) விவசாய காட்டுப் பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத் (ICRAF) திற்கும் இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபைக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி விஞ்ஞான மற்றும் ஒத்துழைப்பிற்கான விவசாய காட்டுப்பயிர் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட CARP-ICRAF Tree Domestication எனும் பெயருள்ள செயற்திட்டத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட JW- 3904 ஆம் இலக்க மோட்டார் வாகனம் அச்செயற்திட்டத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் பூர்த்தியடைந்ததன் பின்னர் கொள்கைச் சபைக்கு ஒப்படைக்கப்படாது அப்போது ஒருங்கிணைப்பு விஞ்ஞானியாகச் செயற்பட்ட தற்போதைய | ஆவணப்படுத்தப்பட்ட தகவல் எதுவும் சபையின் பொறுப்பில் இல்லாததனால் ஒரு சொத்தாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அரசாங்க கணக்காய்வு பிரிவின் சிபார்சின் அடிப்படையில் சபை மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. | வாகனத்தை சபையினால் பெறுப்பேற்று கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போராதனைப் கல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட பேராசிரியர் ஒருவரினால் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை செயற்படுகின்ற ஒரு கட்டிடத்திற்கு ஒரு பகுதியினை சேர்த்துக்கொள்வதற்காக அந்த நிர்மாண ஒப்பந்தத்தினை 2019 ஆம் ஆண்டின் போது பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 12,945,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 12,300,000 தொகைக்கு கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் வேலை முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதி ரூபா 5,516,590 ஆக இருந்த போதிலும் அவர்களுக்கு ரூபா 12,217,303 பணம் செலுத்தப்பட்டிருந்ததனால் சான்றுபடுத்தப்படாத வேலைகளுக்காக ரூபா 6,700,713 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்கு மூலதன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க உடன்படிக்கையின் பிரகாரம் மிகுதிப் பணமானது கட்டிட திணைக்களத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் மற்றும் 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை தாமதிக்காது மேற்கொள்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் பணம் செலுத்தப்பட்டது. | ஒப்பந்தம் தாமதிக்காது நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (இ) | விவசாய வனப் பயிர் தொடர்பான ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி விஞ்ஞாபன மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட ‘‘விவசாய வனப் பயிர்’’ தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கென்யா ஆராச்சி நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி உதவியிலிருந்து இலங்கை | சபையின் செயலாளர்/ பணிப்பாளரினால் இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையின் முகாமையாளருக்கு தெரியப்படுத்தி 2015-01-15 ஆந் திகதி இக்கணக்கு சம்பந்தமாக குற்றவியல் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் கணக்கின் மீதி சம்பந்தமாக இறுதித் தீர்வு கிடைக்கும் வரை இந்த மீதியை சபைக்கு ஒப்படைத்து திறைசேரிக்கு இதுவரை அனுப்பிவைக்காதிருந்ததுடன் | குற்றவியல் விசாரணைகளின் முன்னேற்றதினை விசாரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வங்கி மீதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வங்கியின் டொரிங்டன் கிளையின் 2323246 ஆம் இலக்க செயற்திட்ட வங்கி கணக்கில் காணப்பட்ட ரூபா 1,232,755 மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொள்கைச் சபையின் முன்னாள் தலைவரின் பதவிக்காலம் 2018 நவம்பர் 07 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் 2018 நவம்பர் 07 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான இரண்டு மாதங்களுக்கு அண்மித்த காலத்துக்காக ரூபா 197,600 பணம் சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்டிருந்தும் அப்பணம் இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக சபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய கொடுப்பனவை சிபாரிசு செய்த அங்கீகரித்த மற்றும் கொடுப்பனவை மேற்கொண்ட தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான காலத்தில் பட்டப்பின் படிப்புக்காக வெளிநாடு சென்ற தேசிய விவாசய ஆராய்ச்சி முறைமையின் 25 ஆராய்ச்சியாளர்கள் கொவிட் தொற்று நோய் நிலமையின் காரணமாக கொள்கை சபைக்குத் தெரியப்படுத்தாது இந்நாட்டிற்கு வருகை தந்திருந்த போதிலும் அக்காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,049,580 செலவுப் படிகள் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு கல்வி கால எல்லைக்குள் சபையின் அங்கீகாரமின்றி இலங்கைக்கு வருகை தந்ததனால் அறவிட வேண்டிய பணம் 2023/04/28 ஆந் திகதியில் ரூபா 8,828,025 ஆகும். இப்பணத்தை அறவீடு செய்வதற்காக அவர்களின் நிறுவனத்தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், விசாய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் விவசாய திணைக்களத்தின் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சில மாணவர்களிடமிருந்து இப்பணம் தவணை ரீதியாக அறவிடப்பட்டு சபைக்கு அனுப்பிவைக்கப்படும். | நாட்டிற்கு வருகை தந்த காலப்பகுதிக்குரிய செலவுப் படிகள் அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கமத்தொழில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 3 ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் 3 பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கிய பணத்தில் மிகுதியாக உள்ள ரூபா 459,131 தொகை சபையினால் இதுவரை பெற்றுக்கொள்ளப்படாது 2006 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | கமத்தொழில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் நிறுவனத்தினால் அறவிடவேண்டிய பணம் ரூபா 659,131 ஆக இருந்த போதிலும் ருஹுனு பல்கலைக்கழகம் ரூபா 200,000 தொகையான விலைப்பட்டியல்களை சபைக்கு அனுப்பிவைத்திருந்ததனால் அப்பணம் ரூபா 459,131 ஆகும். அவ்வாறே ஏனைய நிறுவனங்களால் அறவிட வேண்டிய பணத்தை குறிப்பிட்டு பல தடவைகள் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் பதில் கிடைக்காமையின் காரணமாக ஞாபகப்படுத்தல் கடிதங்களும் அந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | உரிய தரப்பினர்களிடமிருந்து மிகுதியாக உள்ள பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆய்ச்சி கொள்கை சபை அதிகாரச் சட்டத்தின் 10 (ஏ) ஆம் உப பிரிவு | நிறுவனங்களுக்கிடையிலான கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் பணம் வழங்குதல் சபையின் செயற்பாடாக இருந்த போதிலும் கடந்த ஆண்டின் போது 4 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது புதிய செயற்திட்டங்கள் இனங்காணப்படவோ அல்லது அதற்காக பணம் வழங்கப்படவோ இல்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக புதிய செயற்திட்டங்களானது கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சியாளரினால் அனுப்பிவைக்கப்படாத தன் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்காக இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக புதிய செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான நடவடிக்கைகள் திட்டமிடப்படல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு
2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,108,798 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,931,190 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 6,177,608 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு செயற்பாட்டுச் செலவுகள் அதிகரிப்பதற்கு ஒப்பீடாக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியம் ரூபா 6,095,124 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு
3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய அமைப/17/1992/728/34 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மலேசியா, தாய்லாந்து, பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளில் ஒரு ஆண்டிற்கு 30 நபர்கள் வீதம் 5 ஆண்டுகளில் 150 ஆராய்ச்சியாளர்கள் கலாநிதி பட்டங்களைச் (Ph.D) தொடர்வதற்காக அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் அவர்களினால் இலங்கையின் கமத்தொழில் ஆராய்ச்சி தற்பொழுது முகங்கொடுக்கின்ற அல்லது எதிர்காலத்தில் முகங்கொடுப்பதற்கு இடம்பெறக் கூடிய சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தமது ஆராய்ச்சி தலைப்புக்களை தெரிவு செய்தல் வேண்டும். மீளாய்வாண்டளவில் அத்தீர்மானத்திற்கு 5 ஆண்டுகள் கடந்திருந்தும் கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நிதிச் சிக்கலின் காரணமாக அதற்காக அனுப்பிவைக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை 79 பேர்கள் மாத்திரமாக இருந்ததுடன் அந்த ஆராய்ச்சியாளர்களுக்கு இலங்கையின் கமத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக மேம்படுத்தக்கூடியது என இனங்காணப்பட்டுள்ள கமத்தொழிலை இயந்திரமயப்படுத்தல் மற்றும் சேதனமயப்படுத்தல்' கமத்தொழில் துறையிலிருந்து ஆராய்ச்சி தலைப்பினை 8 நபர்கள் மாத்திரமே தெரிவு செய்திருந்தார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இவற்றிற்காக 79 ஆராய்ச்சியாளர்களை அனுப்பிவைக்கக் கூடியதாக இருந்ததுடன் அந்த ஆராய்சியாளர்களின் ஆராய்ச்சி தலைப்புக்கள் அவர்களின் நிறுவனங்களுக்கு அத்தியவசியமானதாகவிருந்த துறைகளுக்கு இணங்க தெரிவு செய்யப்பட்டன. | சிபார்சு செய்த ஆராய்ச்சி தலைப்புக்களை தெரிவுசெய்வதற்காக ஆராய்ச்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக நிதி வழங்குகின்ற "தேசிய கமத்தொழில் | ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக நிதிகளை வழங்குகின்ற தேசிய கமத்தொழில் | ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கைகளை உரிய காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டம்" (NARP) என்ற பெயருள்ள கமத்தொழில் அமைச்சில் காணப்படுகின்ற செயற்திட்டம் மேற்கொள்கின்ற ஆராச்சிகளின் இறுதி அறிக்கைகள் சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 இலிருந்து 2020 வரையான காலம் தொடர்பாக பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்படுகின்ற 4 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை உரிய காலத்தில் பெற்று மீளாய்வாண்டின் இறுதி வரையும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி திட்ட (NARP) செயற்திட்டத்தின் 2015 இலிருந்து 2020 வரையான காலம் தொடர்பான 04 இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் ஆராய்ச்சியாளர்களால் வழங்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக நினைவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. | பெற்று மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (இ) | கொள்கை சபையினால் சேதனப் பசளை கமத்தொழிலுக்காக கவனம் செலுத்தலின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு இத்துறையில் ஆராய்ச்சிகளை மேம்படுத்த வேண்டிய 07 முன்னணி துறைகள் இலங்கையில் காணப்படுகின்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் சேதனப் பசளை கமத்தொழில் கொள்கை மற்றும் நிகழ்காலத்தில் சந்தையில் காணப்படுகின்ற சேதனப் பசளை உணவுகளின் தன்மைகளின் தரம் சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்கப்படுத்தியிருக்கவில்லை. | சேதனப் பசளை கமத்தொழிலுக்காக ஒரு குழு உருவாக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு இது தொடர்பாக 02 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் 2020 ஆம் ஆண்டிலிருந்து NARP இற்காக செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தும் போது சேதனப் பசளை கமத்தொழில் தொடர்பான ஆராய்ச்சி பிரேரணைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமைகளில் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆர்வத்தினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பங்களாதேஸ் கமத்தொழில் ஆராய்ச்சி சபை, இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை என்பவற்றிற்கிடையே 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கமத்தொழில் துறையில் ஆலோசகர்களையும், விஞ்ஞானிகளையும் பரிமாற்றம் செய்து கொள்வதன் கீழ் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களை அனுப்பிவைப்பதற்கு 2019 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டங்களில் காட்டப்பட்டிருந்தும் உரிய நாடுகளிலிருந்து பதில் கிடைக்காமை மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. | உரிய நாடுகளிலிருந்து பதில் கிடைக்காமை மற்றும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக அவ்வாறான பயிற்சி வாய்ப்புக்களுக்காக உத்தியோகத்தர்களை அனுப்பிவைக்க முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பின் அவற்றிலிருந்து நீங்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விவசாய வாய்ப்பு நூல்நிலைய (Virtual Library) முறைமையினை ஸ்தாபிப்பதற்காக கடந்த ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரையும் அந்த முறைமை ஸ்தாபிக்கப்படவில்லை. | Agri-net இனை ஸ்தாபிப்பதற்காக ஒரு செயலமர்வினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் கொவிட் தொற்று நோய் காலத்தினுள் காணப்பட்ட இடையூறுகள் மற்றும் மூலதனச நிதி போதியளவில் இல்லாமையின் காரணமாக செயலமர்வினை நடாத்த முடியாதிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையின் மூலம் கடந்த ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட தேசிய பரிசளிப்பு விழா (SLCARP National Awards) விற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்த பரிசளிப்பு விழா நடாத்தப்படவில்லை. | சபை 2021 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தேசிய பரிசளிப்பு விழாவிற்காக விண்ணப்பங்களைகோரி மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் திறைசேரியிடமிருந்து மூலதன நிதியை பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கலின் காரணமாக இந்த விழாவினை நடாத்துவதற்கு 2022 ஆம் ஆண்டின் போது முடியாயதிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |